செ.வெ.எண்:7 நாள்:04.02.2018

**புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் பேரூராட்சித்துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் திறப்பு விழா மற்றும் பூமி பூஜை விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் 01.02.2018 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அன்னவாசல் பேரூராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ 6 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள புதிய நியாயவிலைக் கடை கட்டட பூமி பூஜையினை துவக்கி வைத்தார். அன்னவாசல் பேரூராட்சி மேட்டுத்தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ 3 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாயவிலைக் கடை கட்டடம், பகவதி அம்மன் கோவில் மேட்டுத்தெருவில் ரூ 4 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கலையரங்கக் கட்டடம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், கீழக்குறிச்சி ஊராட்சி, கீழக்குறிச்சி மற்றும் காயம்பட்டி, விளத்துப்பட்டி ஊராட்சி, சித்துப்பட்டி, வீரப்பட்டி ஊராட்சி, சென்னப்பநாயக்கன்பட்டி, எண்ணை ஊராட்சி, மேலப்பட்டி ஆகிய இடங்களில் தலா ரூ 4 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 5 புதிய கலையரங்க கட்டடங்கள், மேலப்பட்டியில் ரூ 25 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய சமுதாயக் கூடக்கட்டடம் என மொத்தம் ரூ 52 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வளர்ச்சித்திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

அன்னவாசல் பேரூராட்சியில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் சார்பில் 160 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதன் மூலம் வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்கப்படவுள்ளது. இந்திரா காலனி 8 வது வார்டில் பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் இப்பகுதியில் தாட்கோ திட்டத்தின் மூலம் ரூ 50 லட்சம் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நார்த்தாமலையில் இந்தாண்டு புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படவுள்ளது. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று காயம்பட்டி ஊரணி விரைவில் சீரமைக்கப்படும். சித்துப்பட்டிக்கு புதிய தார்சாலை அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளதுடன் சித்துப்பட்டியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னப்பன்நாயக்கன்பட்டியில் அரசு தொடக்கப்பள்ளி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலப்பட்டியில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தில் பொதுமக்கள் தங்களது இல்லங்களில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளை நாள் வாடகையாக ரூ 2 ஆயிரம் மட்டும் செலுத்தி நிகழ்ச்சிகளை நடத்தி பயன்பெறலாம். இப்பகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே தமிழக அரசின் இத்தகைய வளர்ச்சித் திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.எஸ்.செல்லத்துரை, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.நாகராஜன், பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.ஆஷாராணி, கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பி.சாம்பசிவம், முன்னாள் பேரூராட்சித் தலைவர் திரு.குருபாபு மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு-செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் புதுக்கோட்டை.**